கனம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை/அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364192

1. District : இராமநாதபுரம் மாவட்டம் PS: மாதகம காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 11/2026 முத.அ. எண் Date: 29.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: மோடில் தடுப்பு நிருத்தச்சட்டம் Sections பிரிவுகள்: 7(a) of PC Amendment Act 2018
(ii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 28.08.2026 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் மாலை சுமார் 06.30 மணி Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.08.2026 Time : நேரம் காலை 08.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ / ~~மின்னணு வடிவம்~~ எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திருப்புலாணி, இராமநாதபுரம் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ரா.உமாமகேஸ்வரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : ராஜேந்திரன் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 29/26 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 2/76, பொக்கனா ரேந்தல் கிராமம். திருப்புலாணி, கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. பர்வீன், உதவி பொறியாளர், திருப்புலாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதம் ஏதுமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன்: M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 29.08.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்தில் வந்து வாதி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார்தாரர் மற்றும் எதிரி AE பர்வீன் என்பவரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.11/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 29.08.2026ஆம் தேதி 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு அனுப்புநர் திரு.ரா.ஹரிகிருஷ்ணன், வயது 29/2026, த/பெ. ராஜேந்திரன், 2/76, பொக்கனாரேந்தல் கிராமம், திருப்புல்லாணி, கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, இராமநாதபுரம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பொக்கனாரேந்தல் குரூப்பில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஹரி கிருஷ்ணன் 29/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

29/08/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.08.2026 - 09.05 hrs.

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்,
ஊ.த.க மாவட்ட
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 11/2026 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

எனது தந்தை பெயரில் உள்ள நஞ்சை நிலங்களுக்கு விவசாய பயன்பாட்டிற்காக, திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் பொக்கனாரேந்தல் சுடுகாடு ஊரணியிலிருந்து வண்டல் மண் எடுப்பதற்கு கடந்த 05.08.2026 அன்று ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தேன். எனது விண்ணப்ப எண். TN-12020260805318 ஆகும். அதன்படி மேற்படி ஊரணியிலிருந்து 298 கன மீட்டர் மண் எடுக்க திருப்புல்லாணி BDO கடந்த 10.08.2026ம் தேதி எனக்கு ஆர்டர் வழங்கினார்கள். பின்னர் இரண்டு நாள்கள் கழித்து திருப்புல்லாணி BDO அவர்களை பார்த்து டிரிப் சீட்டு கேட்டதற்கு அவர் AE பர்வீன் அவர்களை பார்க்க சொன்னார். அதன்படி AE பர்வீன் அவர்களை பார்க்க திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு பலமுறை சென்றபோது அவரை பார்க்க முடியாததால் 21.08.2026ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு அவரை போனில் தொடர்பு கொண்டு டிரிப் சீட்டு கேட்டபோது, டிரிப் சீட்டு வரல்லனு சொன்னார். பின்னர் மீண்டும் 27.08.2026ம் தேதி சுமார் 10.30 மணிக்கு தொடர்பு கொண்டபோது, நான் இன்று அலுவலகத்தில் இல்லை, நாளைக்கு வாருங்கள் என்று கூறினார். அதன்படி 28.08.2026 காலை சுமார் 09.33 மணிக்கு AE பர்வீன் அவர்களிடமிருந்து எனது அலைபேசிக்கு Missed Call வந்திருந்தது. உடனே நான் திரும்ப அவரை அழைத்தபோது, காலை 11.00 மணிக்கு அலுவலகம் வருமாறு கூறினார். அதன்படி நான் 28.08.2026ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்றபோது AE பர்வீன் அவர்கள் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் டிரிப் சீட்டு கேட்டபோது, டிரிப் சீட்டு இப்போது இல்லை, மதியம் வாருங்கள் என்று கூறினார். அதன்படி நான் நேற்று மதியம் சுமார் 02.00 மணியளவில் மீண்டும் அலுவலகம் சென்று மாலை சுமார் 06.00 மணி வரை காத்திருந்தேன், ஆனால் அவர் அலுவலகத்திற்கு வரவில்லை. பின்னர் நேற்று மாலை சுமார் 06.30 மணிக்கு அவரது போனுக்கு தொடர்பு கொள்ள முடியாததால், வாட்ஸ் அப் காலில் தொடர்பு கொண்டபோது, டிரிப் சீட்டு இன்னும் வரல, உங்களுக்கு டிரிப்சீட்டு வேறு அலுவலகத்திலிருந்து தான் ஏற்பாடு செய்து தரணும், அதற்கு ரூ.5,000/- பணம் ரெடி பண்ணிட்டு கலெக்டர் ஆபிஸ் பஸ் ஸ்டாப்கிட்ட வந்து போன் பண்ணுங்க என சொன்னார். நான் எனது நிலையை சொல்லி டிரிப் சீட்டை வாங்கிடலாம் என்று

நினைத்து நேற்று இரவு சுமார் 07.15 மணிக்கு கலெக்டர் ஆபிஸ் பஸ் ஸ்டாப் அருகில் சென்று அவரை வாட்ஸ் அப் காலில் தொடர்பு கொண்டபோது அவர், சேதுபதி நகர் வடக்கு 4 வது பிரதான சாலைக்கு வருமாறு கூறினார். பின்னர் அங்கு சென்று இரவு சுமார் 07.25 மணிக்கு வாட்ஸ் அப் காலில் தொடர்பு கொண்டபோது அவர், அருகில் உள்ள அவரது வீட்டிற்கு வரச் சொன்னார். நான் அங்கு சென்று அவரை சந்தித்தபோது ரூ.5,000/- கொண்டு வந்திட்டீங்களா எனக்கேட்டார். நான் என்னிடம் பணம் இல்லை என சொன்னதற்கு, சரி இப்போதைக்கு கையில இருக்குற பணத்த கொடுங்க எல்லாரும் கொடுத்துட்டுதான் டிரிப் சீட்டு வாங்குறாங்க எனக்கேட்டார். நானும் வேறு வழியின்றி செலவுக்கு வைத்திருந்த பணம் ரூ.2,000/- த்தை கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட அவர், எனக்கு 4 டிரிப் சீட்டுகளை மட்டும் வழங்கி விட்டு, மீதமுள்ள ரூ.3,000/-த்தை நாளை (29.08.2026) காலை 10.00 மணிக்கு மேல் நான் போன்ல பேசுறேன் அப்ப நான் சொல்ற GPay நம்பருக்கு பணத்த அனுப்பிட்டு மீதி டிரிப் சீட்டை வாங்கிகோங்க, அப்பதான் மீதமுள்ள டிரிப் சீட்டும் கிடைக்கும், பிரச்சனையில்லாம மண் எடுக்க முடியும் என சொல்லிட்டு, ஒருவேளை நான் போன் பண்ணலனா வீட்டுக்கு வந்து பணத்த கொடுத்துட்டு வாங்கிகோங்க என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லி அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் யோசித்து பார்க்க மீதி லஞ்சப் பணத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, அரசுப் பணிக்காக லஞ்சம் கேட்டு ரூ.2,000/-த்தை 28.08.2026ம் தேதி பெற்றுக்கொண்டு, மீதப்பணம் ரூ.3,000/-த்தை இன்று கொடுக்க வற்புறுத்தும் AE திருமதி.பர்வீன் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) ரா.ஹரிகிருஷ்ணன். அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 29.08.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து காலை 09.00 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.11/2026 u/s 7 (a) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/08/2026

காவல் ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு

இராமநாதபுரம்